திருக்குடும்பந் துணை

வேளாங்கண்ணி

அர்ச். ஆரோக்கிய மாதாவின் பேரில்

கும்மி

இஃது

ஸ்ரீமான் ச. செல்வராஜு ரெட்டியார், பி.ஏ., எல்.டி.,
இயற்றியது.

பிரசுரக்கர்த்தர் :
அருள் அண்டு கம்பெனியார்,
தபால் பெட்டி 294
மதராஸ்.
September 1929.

Right Registered)

திருக்குடும்பந் துணை

வேளாங்கண்ணி

அர்ச். ஆரோக்கிய மாதாவின் பேரில்

கும்மி

இஃது

ஸ்ரீமான் ச. செல்வராஜு ரெட்டியார், பி.ஏ., எல்.டி.,

இயற்றியது.

பிரசுரக்கர்த்தர் :

அருள் அண்டு கம்பெனியார்,

தபால் பெட்டி 294

மதராஸ்.

September 1929.

(Copy Right Registered)

வேளாங்கண்ணி

அர்ச். ஆரோக்கிய மாதாவின் பேரில்

கும்மி

காப்பு

செந்நெல் வயல்சூழுஞ் சீர்வேளாங் கண்ணியிலே
நன்னவங்கள் செய்தருள நாடிவரும்—அன்னையெனும்
ஆரோக்கியதாய்க் கும்மி யாசையுடன் பாடத்துணை
பாரோரை மீட்டான் பதம்.

நூல்

(1) கும்மியடி பெண்ணே கும்மியடி காங்
கூப்பியே கும்பிட்டுக் கும்மியடி
தம்மிலே தாமாயிருப்பவர் காப்பெனச்
சாற்றியே கும்பிட்டுக் கும்மியடி. (கும்மி)

(2) எங்கும் நிறையும்பரா பரனையிணை
யில்லாதமா பெருந் தேசிகனை
கங்கு கரையில்லாக் கருணைப் ரவாகனை
கண்ணேக்கிக் கும்பிட்டுக் கும்மியடி. (கும்மி)

(3) நித்திய பேரின்ப நாயகனை நிதம்
நீள்புவி காத்திடும் மீயகனை
சத்திய ரூபமாஞ் சேயகனைத் துதி
சாற்றியே கும்பிட்டுக் கும்மியடி. (கும்மி)

(4) அம்புவி மீட்க வந்தவனைத்திரு
அங்கத்தை யாகாரமா தந்தவனை
எம்பெருமானெனுஞ் சேசையனைச் சிரம்
ஏற்றியே கும்பிட்டுக் கும்மியடி. (கும்மி)

(5) மாதர்க்குள்ளே சிறந்தாளெனும் பாவையை
மாண்பு நிறைந்திடுந்தாய் மரியை
கோதணு காவரம் பெற்றுளிர் கோதையை
கும்பிட்டுப் பாடிநீ கும்மியடி. (கும்மி)

(6) தேவனைப் பாலகனுய்க் கருவேற்றிடும்
செப்பரும் பாக்கியம் பெற்றவளை
பூவுல கோர்க்கனை யாகிய தாயினை
போற்றிநீ கும்பிட்டுக் கும்மியடி. (கும்மி)

(7) சத்தியம் பூண்டதிருச் சபைக்கே யொரு
தாவருங் காவலராய் விளங்கும்
சுத்தவளன் சூசைமா முனியைத் துதி
சொல்லியே கும்பிட்டுக் கும்மியடி. (கும்மி)

(8) வானக வாசிகள் சம்மன சோர்திரு
வாளரா மர்ச்சிய சிஷ்டவர்கள்
ஆனதுணை புரிவாரவர் மேன்மையை
அன்புடன் சொல்லிநீ கும்மியடி. (கும்மி)

(9) நோயுற்ற மானிடர்க்கே சுகந் தந்தருள்
நோக்கிடுந்தாய் மரிவந் தெழுந்த
கோயி லமைந்துள்ள க்ஷேத்திரப் பான்மையை
கூறுவேன் கேளடி பெண்மயிலே. (கும்மி)

(10) தென் னிந்தியாவின்கண் உள்ள ஸ்தலங்களில்
சீருஞ் சிறப்பாய் விளங்குவது
தொன்மையுடைய வேளாங் கண்ணி யென்னுமூர்
தாயகி தங்குந் திருப்பதியே. (கும்மி)

(11) இத்துணைப் பெற்றியார் புண்ணிய நற்றலம்
எங்கு மிலையெனு மூரதுவே
அத்துணைப் பெற்றியவ் வூருக்குண்டானதும்
ஆண்டவள் வந்ததால் பெண்மயிலே. (கும்மி)

(12) வேளாங்கண்ணி யென்னுமூர் தஞ்சை ஜில்லாவில்
வீங்கு துறைமுகப் பட்டினமாம்
நாளும்புகழ் நாகைக்கே தெற்காறு மைமல்
நவிற்கடற் பாங்கமர் சிற்றூராம். (கும்மி)

(13) மூவாயிரஞ் சனங்கொண்ட வேளாங் கண்ணி
முன்னவன் தாய்வருங் காரணத்தால்
தாவாச் சிறப்புற் றிலங்குகின்ற தல்லால்
தன்னில் விசேஷமொன் றில்லையடி. (கும்மி)

(14) முப்போதுங் கன்னிமை குன்றாத நாயகி
மொய்த்து வருகின்ற பக்தருக்கு
செப்பரு மற்புதம் பற்பல செய்வதால்
ஜெகம்புகழ் க்ஷேத்திர மானதடி. (கும்மி)

(15) வேளாங் கண்ணியெனும் மூரினுமந் தன்னை
வியன்பெருந் தென்னிந்தியாவி னிலே
கேளாத பேரில்லை பிள்ளைகளுஞ் சொல்வர்
கேளடி மேற்கொண்டு பெண்மயிலே. (கும்மி)

(16) ஆரோக்கிய மாதாவின் நாமத்தைச் சூடிய
ஆடவர் பெண்டீர் பல்லாயிரவர்
பார் வேளாங்கண்ணிப் பேரினைப் பூண்டிடும்
பக்தரு முண்டெனக் கும்மியடி. (கும்மி)

(17) ஆதியிலேயிந்த வூர்புக ழேற்றதின்
அற்புதக் காரணந்தா னுரைப்பேன்
மேதினி யாவருங் கேட்டதை நாடிட
மேவிநீ கூறியே கும்மியடி. (கும்மி)

(18) அற்புதஞ் சேரந்த வூரினிலோர் தெரு
அண்ணா பிள்ளைவீதி யென்றுரைப்பார்
செப்புமதற்குக் கிழக்கினிலோர் குளம்
சேர்ந்திடு மாலவிருட்ச முண்டே. (கும்மி)

(19) அவ்வழி யேகுவர் தாகவிடாய்தனை
அந்தக் குளத்தினில் தீர்த்துக்கொண்டு
செவ்வியவால் நிழல்தங்கி யிளைப்பாறிச்
செல்வதே யின்னும் வழக்கமடி. (கும்மி)

(20) சற்றேறத்தாழ முந்நூறுண்டுகள் முன்னர்
சார்ந்த நாகப்பட்டணத்தி லிருந்த
உற்ற எஜமானுக்கோர் சிறுபையன்பால்
ஓர்தினங் கொண்டேகினனவ் வழியே. (கும்மி)

(21) சூரிய வெப்பத்தால் தாகமுற்றுப் பையன்
சொன்ன குளஞ்சென்று நீர்பருகி
நேரிதா யாலமரத்தடி சென்றதன்
நிழலில் தங்கி யிளைப்பாறினன். (கும்மி)

(22) கொஞ்ச நேரத்துக் கெல்லாமவ னித்திரை
கொள்ள விருப்புற்றுப் பால்குடத்தைச்
சஞ்சல மின்றியே பக்கத்தில் வைத்தனன்
துஞ்சின னுமவண் பெண்மயிலே. (கும்மி)

(23) தூக்கத்தி லோரினிதாகிய தீங்குரல்
துல்லிய மாயவன் காதொலிக்க
நோக்கினன் சுற்றிலும் நித்திரை நீங்கியே
நூதனம் யாதென்று பார்த்தனனும். (கும்மி)

(24) அப்பொழு தங்கொரு சுந்தரநாயகி
ஆதவன் போலொரு நன்மகவைக்
கைப்புறமேந்தி வெண்ணுடை தரித்தவன்
கண்முனர் நிற்பதைக் கண்டனனும். (கும்மி)

(25) அவ்விதந் தோன்றிய மாதரசாள் தன
தன்பான மைந்த னருந்துதற்கு
செவ்விதாய்ப் பாற்றரவேண்டுமென்றுளந்தச்
சிறுவனைத் தான் விநயத்துடனே. (கும்மி)

(26) பையனும் பார்த்தனன் பாலில்லை யென்னுமல்
பாவையின் மைந்தனருந்தக் கொஞ்சம்
மெய்யனென் றோராமல் பால்தந்து நின்றனன்
மிக்க பரிவுடன் பெண்மயிலே. (கும்மி)

(27) பின்ன ரெழுந்தவன் நாகைக்குப் போகையில்
பீதி கொண்டே பயந் தேகினனும்
தன் னெஜமானனும் பால்குறை தற்கென
தண்டித் தடிப்பனென்றே பயந்தான். (கும்மி)

(28) அஞ்சு மனத்துடன் வந்த சிறுவனும்
ஆர்சுவைப் பாலுள பாத்திரத்தை
சஞ்சலமா யெஜமான் முனர் வைத்தனன்
சார்ந் தெஜமானனும் பார்த்தனனும். (கும்மி)

(29) பாத்திரந் தன்னைத் திறந்ததிலே யுள
பாலினைப் பார்த்திடும் போதினிலே
பாத்திரம்பால் குறையாம லிருப்பதைப்
பாலகன் பார்த்து வியந்து நின்றான். (கும்மி)

(30) அற்புதமென்று தன்னுள்ளத்திலே யெண்ணி
ஆச்சர்யங் கொண்டு மிரட்சியுற்று
நிற்குஞ் சிறுவனைக் கண்டெஜமானனும்
நேர்ந்ததி யாதென்றான் பெண்மயிலே. (கும்மி)

(31) ஏண்டா பயலே மிரண்டு நிற்கின்றனை
ஏனின்று நேரங்கழித்து வந்தாய்
ஈண்டுரை யென்றெஜமான னதட்டவே
ஏழையப் பையன் மொழிந்திடுவான். (கும்மி)

(32) நீர்நிலையாங் குளத்தண்டை மரத்தடி
நேர்ந்திடு மற்புதக் காட்சிதன்னை
சீர்நிறை பாலர்க்குப் பால்தரு சம்பவச்
செய்தியைத் தானெடுத் தோதினனும். (கும்மி)

(33) சொன்னதைக் கேட்டெஜமான னதிசயந்
தோன்று மனத்தனுப் பையனுடன்
அன்ன விடத்தினைக் கண்டுளந் தேறுவான்
ஆவலாய்ப் போயினன் பெண்மயிலே. (கும்மி)

(34) அந்த ஸ்தலத்தினைச் சேர்ந்தவன் பார்க்கையில்
அற்புத மாயந்தக் காட்சிவரச்
சுந்தர மாது மைந்தனை யேந்தியே
தோன்றுதற் கண்டு நமஸ்கரித்தான். (கும்மி)

(35) அன்னவன் நாகைக்குச் சென்றபின் கண்டநல்
அற்புதக் காட்சியாஞ் சம்பவத்தைப்
பன்னியே யெங்கும் பிரஸ்தாபிக்கக் கேட்டனர்
பக்தி நிறைந்த கிறீஸ்துவர்கள். (கும்மி)

(36) காட்சியில் தோன்றிய காரிகை தானுமே
கர்த்தரை யீன்றருள் கன்னிகையாம்
மோட்ச விராக்கினி யாமரி யென்றவர்
முன்னியே கூட்டமாய்ப் போயினராம். (கும்மி)

(37) கூறுந் தலஞ்சென்று சேருங் குளந்தன்னில்
கோதிலா மாமரி காட்சிதந்த
வாறுதன்னை மனஞ் சிந்தித்துப் பூசித்தே
அன்புடன் வாழ்த்தி வணங்கினராம். (கும்மி)

(38) அன்றுமுதலத் தடாகத்தை யாவரும்
ஆசித்து மாதாகுளம் எனவே
இன்னு மழைத்து வருகின்றன ரென்றன்
ஏந்திழை யாமுயர் பெண்மயிலே. (கும்மி)

(39) இரண்டாவதாக நிகழ்ந்த புதுமையை
எல்லோருமே யறிந் தேற்றுதற்குத்
திரண்டு வருகின்ற மாந்தருக்கே சொல்லி
சீர்பெறப் பாடிநீ கும்மியடி. (கும்மி)

(40) வேளாங் கண்ணிக் கருகாமையி லுள்ளதோர்
வெளியான நத்த நிலந்தனிலே
கேளுற நின்ற விருட்சங் களுக்கிடை
கேளர சொன்று மிளிர்ந்ததுவாம். (கும்மி)

(41) அந்த மரத்தடி யோரிடைப் பையன்றுன்
அமர்ந்து மோர்விற்பனை செய்வதுண்டு
சந்தத மன்னவன் கால் முடமானதால்
தாரணி வேறொன்றுஞ் செய்திலனே. (கும்மி)

(42) கால்வழங்கா முடமான தன் பிள்ளையைக்
காவலாய் மோரினை விற்கவென்று
பால் வழங்கும் பாவைதூக்கி வந்தம்மரப்
பாங்கர் வைத்தேகுவளா மயிலே (கும்மி)

(43) காலையில் வந்தமர் பையனு நாளெல்லாம்
கருத்துடன் மோர் விற்றுக்கொண்டிருக்க
மாலையில் வந்தனை மோர்க்குடம் பிள்ளையை
வாலாயமா யெடுத்தில் புகுவாள் (கும்மி)

(44) இவ்வாறிருக்கையி லோர்தினம் நண்பகல்
எங்கும் ஜன நடமாட்டமில்லாச்
செல்வியிலே ரழகே யுருவாகிய
சித்திரப் பாவையுந் தோன்றினளாம் (கும்மி)

(45) சுந்தரரூபியாய் வந்தவள் தன்கரந்
தோன்று குழந்தை யருந்திடமோர்
தந்திடவென்ன வப்பையன் வியப்புற்று
தந்தனனில்லை யென்னுமலேதான் (கும்மி

(46) அற்புதமாயவண் தோன்றிய மாதரும்
அன்புடன் பிள்ளைக்கு மோரூட்டி
பொற்புடன் றானுந்தன் பிள்ளையுமவ்விடம்
போந்த விஷயத்தை நாகையினில் (கும்மி)

(47) உள்ளகிறீஸ்துவ சீமானொருவருக்
குள்ளதைச் சொல்லுவா யென்றுரைக்க
கள்ளங் கபடில்லா பையனுமம்மணி
காலில்லா நொண்டியா லாகுமோதான் (கும்மி)

(48) என்றந்தமாதரைக் கேட்டது மென்கரம்
ஏந்திய தெய்வீக மைந்தனருள்
உன்றனக்குண்டதனல் குணமுற்றெழுந்
துண்மையாய் நீ நடப்பா யென்றனள் (கும்மி)

(49) பையனெழுந்தனன் காலும் வழங்கிற்று
பார்மிசை பாதம்வைத்தே நடந்தான்
தையலினுசீரால் நேர் புதுமைக்காகத்
தாண்டவமாடி மகிழ்ந்தனனும் (கும்மி)

(50) இதற்கிடை காட்சி தோன்றிய காரிகை
எங்கோ மறைந்தனளென்று கண்டு
பதத்திரல் பெற்றிடும் பையனுமோடியே
பாங்காகத் தாயிடங் கூறினனும். (கும்மி)

(51) அன்னவன் தாயாரும் மற்றயல் வீட்டாரும்
அற்புத மற்புத மென்றறைந்தே
அன்னையை வாழ்த்தியே யெல்லையில்லாமலே
ஆனந்தமெய்தினர் பெண்மயிலே (கும்மி)

(52) ஆரோக்கியந் தந்தருளன்னைபின் சொற்படி
அங்கிருந் தேகினர் நாகைக்கேதான்
பேரோங்கு மெய்மறைச் சீமானைக் கண்டெழில்
பெற்றிடு மற்புதந்தான் சொலவே (கும்மி)

(53) இப்படியாக விருக்கையி லேயந்த
இங்கித சீமானுக் கோரிரவில்
செப்பிய தாய்மரி சொப்பனத்தே வந்து
சீரிய தரிசனே தந்தனளாம் (கும்மி)

(54) அந்த நற்புண்ணிய வானுமதன் பொருள்
யாதென் றறியாமலே கலங்கிச்
சிந்தனையாக விருக்கையில் தாயுடன்
சேயனும் வந்தனன் பெண்மயிலே (கும்மி)

(55) பைய னுரைத்ததுஞ் சொப்பனங் கண்டதும்
பாங்குடனே யொத்திருந்ததினால்
வையத்திலீது விசேஷமென் றெண்ணியே
வாழ்த்தினன் பெண்மயிலே (கும்மி)

(56) சீமானுஞ் சேயனைக் கூட்டிக்கொண்டே வந்தான்
சீர்பதியாம் வேளை யூரினுக்கே
தோமிலா நாயகி காட்சியளித்திட்ட
தூய ஸ்தலந்தனைக் கண்டனனும் (கும்மி)

(57) அங்கு முழந்தாட்படியிட்டு மன்னவன்
அன்னையைப்பார்த்து ஜெபிக்கையிலே
கங்குக்கரையில்லா காருண்ய மாமரி
கண்டதுபோலவே காட்சிதந்தாள் (கும்மி)

(58) காட்சியில் தோன்றிய காரிகைதன் பேரால்
காதலுடனொரு கோயிலினை
சாட்சியா யவ்விடங் கட்டுமாறேவினள்
தாரணி மானிடர் மீதிரங்கி (கும்மி)

(59) ஆரோக்ய தாயது சொற்படியேயவன்
ஆனமுயற்சி செய்தவ்விடத்தில்
சீரானதோர் சிறு கோவிலைக்கட்டினன்
செப்பிய நாகைசீமான் மயிலே (கும்மி)

(60) தேவதாய் காட்சியில் தோன்றியவாறு போல்
சேயனைக் கைத்தலத் தேந்துகின்ற
பாவனையாகச் சுரூபஞ்செய்வித்ததைப்
பாங்குடன் கோவிலில் வைத்தனனும். (கும்மி)

(61) அன்று தொடங்கியே பக்தரோராளமாய்
அச் சிறு கோவிலை நாடியே தான்
சென்றங்கெழுந்தருளற்புத நாயகி
சீர்பதம் போற்றிடலாயினராம். (கும்மி)

(62) அற்புதமாமரியைத் தேடிவந்தவர்க்
காரோக்யந்தந்த தோடின்னும்பல
நற்புதுமா நவமானவரங்களும்
நாயகியாள் தரலாயினளாம். (கும்மி)

(63) ஆதியில் நொண்டிக்குக் கால் முடம் நீக்கிநல்
ஆரோக்யந் தந்து பின் மற்றவர்க்கும்
ஆதரையற்புதமாய்ப் பிணிதீர்த்ததால்
ஆரோக்யமாதா வென்றோதினர்காண். (கும்மி)

(64) மூன்றுவதாக நிகழ்ந்தவரலாற்றை
மொய்குழலே சொல்லக் கேட்டிடுவாய்
ஆன்றோருரைப்படியே பதினேழாம்நூற்
றுண்டு பிற்பாகத்தில் நேர்ந்தது காண். (கும்மி)

(65) மேனாட்டில் மெய்மறை யோங்கிடும் போர்த்துகால்
மேவியவர்த்தகர் கீழ்த் திசையில்
மானாட்டியே கப்பல் வர்த்தகஞ் செய்தனர்
மாவளஞ்சூழ் நமதிந்தியாவில். (கும்மி)

(66) ஓர்தின மங்ஙனமே யொருகப்பலில்
உள்ள சரக்குக ளேற்றிக் கொண்டு
நீர்கடன்மீது மக்கௌநின் றிலங்கைக்கு
நேரே புறப்பட்டார் பெண்மயிலே. (கும்மி)

(67) வங்கக் குடாக்கடலிற் கப்பல் போகையில்
வந்தது வன்புயற்காற் றெழும்பி
வங்கமும் வாரிதியாழுமென் றஞ்சியெ
வல்லமுயற்சிகள் செய்தனராம். (கும்மி)

(68) என்ன முயன்றும் பயனில்லை யென்றுகண்
டேழை மீகாமனும் ஆட்களுந்தாம்
முன்னிநின் தாரகையாமரியைக் கூவி
முழந்தாட் படியிட்டு வேண்டினராம். (கும்மி)

(69) அம்மணி யாபத்திற்காத் தெமைச் சேர்த்திட
அன்பருள் கூர்ந்திடுவா யனையே
எம்மை நீ எக்கரை சேர்ப்பையோ வக்கரைக்
கேயருகேயுள்ள ரதனில் (கும்மி)

(70) உன்றிரு நாமத்தாலோர் கோயில் கட்டிடு
வோமென நேர்த்தி செய்தாருடனே
மன்றுட்டுப் போலவர் சிந்தாத்திரையாக
மாண்புடன்றன் கரை சேர்ந்தனராம். (கும்மி)

(71) கப்பலொதுங்கின வூரினையாதெனக்
கண்டுகொள்ள விசாரிக்கையிலே
செப்பருமற்புத வேளாங்கண்ணி யென்று
சேர்ந்தவர்கேட்டு மகிழ்ந்தனராம். (கும்மி)

(72) தங்களை யற்புதமாய்க் கடன் மூழ்காமல்
தயவுடன் காத்ததயாபரியைச்
செங்கரங் கூப்பியே நன்றியுரைத்தவர்
செப்பிய நேர்த்தி செலுத்தானர். (கும்மி)

(73) சொல்லியவாறொரு கோவிலைக்கட்டிட
சுந்தரத்தாய் மரிக் கேற்றதொரு
நல்விடந்தேடியே பார்க்கையி லாங்கொரு
நாயகியாலயம் பார்த்தனராம். (கும்மி)

(74) கூரைகட்டாகியே நாட்பலகண்டவக்
கோவில் புகுந்தவர் சேவிக்கையில்
சீரியவா ரோக்யமாமரி தோன்றியோர்
செவ்விய நல்லிடங் காட்டினளாம். (கும்மி)

(75) அப்படியே கப்பலோட்டிகள் காட்டிய
அந்தஸ்தலத்தினில் செங்கல்லினால்
தப்பாமலோர் சிறு கோவிலைக் கட்டினர்
தற்பரனுர் திருதாயகிக்கே. (கும்மி)

(76) புதிதாகக் கட்டிய கோவிலில் தாபிக்க
பொன்மயமான சுரூபமதை
நிதிசேருஞ் சீர்மை நின்றே தருவித்திட
நேயமாயோசிக்க லாயினராம். (கும்மி)

(77) அப்போது கூரைவேய் கோயிலில் தங்கிய
அற்புதமாகுஞ் சுரூபந்தானுய்
செப்பும் புதுக்கோவில் பீடத்தில் நின்றதன்
சீரதைக் கண்டு வியந்தனராம். (கும்மி)

(78) போர்த்துகல் மாந்தரும் அன்னையைச் சேவித்து
போயினராங் தங்கள் தேசத்துக்கு
நேர்த்தியாய் பீடத்தை ஜோடிக்க சாமான்கள்
நிச்சயமாய்க் கொண்டு மீள்வமென்று. (கும்மி)

(79) அடுத்த பயணத்தி லக்கப்பலோட்டிகள்
அந்த நிறை பீங்கானேடுகளை
கொடு வந்து பீடத்தைச் சிங்காரித் தேகினர்
குவலய மெச்சிடப் பெண்மயிலே. (கும்மி)

(80) பீடமலங்கரித்தே விளங்காநின்ற
பீங்கானில் ஆண்டவரின் சரிதை
ஆகடமாய்ச் சில சித்திரித்தோங்குதல்
ஆங்கின்றுங் காணலாம் பெண்மயிலே (கும்மி)

(81) வேளாங்கண்ணி யென்னும் க்ஷேத்திரமுண்டான
விதமிது தானெனக் கண்டறிவாய்
நாளுமிவற்றிற்குச் சாசன மூலமாய்
நவின்றிட வாதார மில்லையேனும் (கும்மி)

(82) பரம்பரையாக வெல்லோரு மிவற்றினைப்
பன்னி வழங்கி வருகின்றதால்
திறம்படு முண்மை யென்றேசொல்லி தேவதாய்
சீர்த்தியைக் கூறிநீ கும்மியடி (கும்மி)

(83) வெள்ளைக்காரர் வந்து கட்டியவாலயம்
வேளையூர் நாடிடும் பக்தர்களுங்
கொள்ளவிடம் போதவில்லை யென்றத்துடன்
கோவிலை விஸ்தார மாக்கினர்காண் (கும்மி)

(84) விஸ்தாரமாக்கி யிரண்டு முறையதை
வேலையுஞ் செய்தார் முகப்பினிலே
சித்திரமாயுயர் கோபுரங்க ளிரண்டு
சேர்த்தலங்காரமாய்க் கட்டினர்காண் (கும்மி)

(85) இப்பொழு தாலயம் மிக்கவிசாலமாய்
எல்லணி மாமரிக் கேற்றதாகத்
தப்பிலாதோங்கி விளங்கின போதிலும்
தாசர்க்குப் போதாது காண்மயிலே (கும்மி)

(86) ஏனெனி லாரோக்ய மாதாவினாலயம்
இன்புறக்காணுவா னண்டுதோறும்
தானையாயாங் குறு மானிடரின்தொகை
தாரணிமீது கணக்கில்லையாம் (கும்மி)

(87) இலக்ஷக் கணக்காகப் பக்தர்கள் வந்தவண்
இங்கிதமா யெழுந்தாளுகின்ற
அலக்கண் தீராரோக்ய மாதாவைக் கண்டருள்
ஆனந்தம் பெற்றுத் திரும்புகின்றார். (கும்மி)

(88) செப்டம்பர் மாதத்தில் நேருந்திருநாட்குச்
செல்லுவோ ரைம்பதி னுயிரமாம்
மற்றத்தினங்களி லெப்போதும் பக்தர்கள்
மாருது வந்துகொண்டே யிருப்பர் (கும்மி)

(89) உற்சவ காலத்தில் கூடும் ஜனங்களுக்
குள்ள வசதிக ளுண்டனந்தம்
நற்சுகாதாரமும் வைத்தியசாலையும்
நன்மையை நாடியே செய்கின்றனர் (கும்மி)

(90) யாத்திரைக் காரர்கள் தங்கி யிருப்பதற்
கங்குண்டு சத்திரஞ் சாவடிகள்
நேத்திரத்தால் கண்டு தாயிணைப் போற்றிட
நேரிடவாருங் ளென்றழையாய். (கும்மி)

(91) தீராதநோய்களைத் தீர்த்திடும் நாயகி
தேவனுக் கன்னையா மாமரியை
ஆரோக்ய மாதாவைப் போற்றவாருங்களென்
றன்புடன் சொல்லி நீகும்மியடி. (கும்மி)

(92) வேளாங்கண்ணியில் வாழாரோக்யமாதாவை
வேண்டியே போகுநர் எப்பவுமே
மீளார்கள் நன்மை பெருமலே யென்றுநீ
மேதினி மீதினிற்கும் மியடி. (கும்மி)

(93) தேகத்தின் நோய்களைத் தீர்ப்பதுபோலவே
தீமையாமாத்தும நோய்களையும்
பாகத்தில் தீர்த்திடுமா ரோக்யமாதாவின்
பாதத்தை நாடுங்களென்றழையாய். (கும்மி)

(94) ஆதியுமந்தமு மில்லாத தேவனுக்
கன்னையுந் தேவியுமாமகளும்
சோதியாய் நின்றருளா ரோக்யமாதாவைத்
துதித்திடவாருங்க ளென்றழையாய். (கும்மி)

(95) பரலோக பூலோக் இராக்கினியாமவள்
பா[illegible]வென்ற விராக்கினியாம்
திரமான நாயகி ஆரோக்யமாதாவைத்
தேடியேவாருங்க ளென்றழையாய். (கும்மி)

(96) நன்மையெல்லாம் பரிபூரணமாய் நிறை
நாயகி யாரோக்ய மாமரியாள்
தின்மை யகற்றிடுவாளெனச் சொல்லிநீ
சிங்காரமாகவே கும்மியடி. (கும்மி)

(97) ஆங்காரப் பேயின் சிரத்தை மிதித்திடும்
ஆனந்த வாரோக்யமாதரசை
பாங்காகப் போற்றியே பாரெல்லாங் கொண்டாடப்
பன்னியே கும்பிட்டுக் கும்மியடி. (கும்மி)

(98) தூய்மையும் வாய்மையுந் தோன்றிடம் போலொளிர்
சோதியா மாரோக்ய மாமரியாள்
நோய்மை யகற்றிடமன்றுடுவா யெந்தன்
நூலினைப்பாடியே கும்மியடி. (கும்மி)

(99) சந்ததமா ரோக்யந் தந்திடுவா ளெங்கள்
தாயெனு மாரோக்ய மாமரியாள்
இந்தரை மீதினில் தஞ்சமென்றன்னையை
எத்தித் துதிப்பீரென்றே யழையாய். (கும்மி)

(100) ஆரோக்ய மாமரிதன்பதம் வந்து நீர்
ஆரோக்யமாகிய நன்மைபெற்றுச்
சீரோங்கி பேரோங்கி வாழுங்களென்றிடும்
செல்வனுரை பாடிக் கும்மியடி. (கும்மி)

T. S. M. PRESS, PRINTERS, MADRAS